மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

109—

மாணவியர் விடுதி

***7928—திரு. வி. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் நெஞ்சங்களில் என்றென்றும் நீங்கா இடம் பெற்றிருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசையை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டிய வழியில் நல்லாட்சி செய்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்க அரசு முன்வருமா என்ற வினாவினை கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள்.

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஜூன் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. வி. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் மேம்பாடும், மாநில வளர்ச்சியும் தன் இரு கண்கள் என அயராது உழைத்து, பகலில் கதிரவனாய், இரவில் நிலவாய் என்றும் எங்களுக்கு ஒளி தந்து, வங்கக் கடலோரம் சந்தனப் பேழையில் உறங்கிக்கொண்டிருக்கின்ற அன்னையின் திருவடிகளை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய திசையில் ஆட்சித் தேரை சரியாகச் செலுத்திவரும் எங்கள் கழகத்தின் சாரதி, (மேசையைத் தட்டும் ஒலி) தொண்டனுக்குத் தொண்டனாக இருந்து, அம்மா அவர்களால் அடையாளம் கண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) ஆளாக்கப்பட்ட எங்கள் பாசமிகு அண்ணன், கொங்கு நாட்டுத் தங்கம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கலசப்பாக்கம் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் கல்வி பயின்று வருகின்றார்கள். இவர்களில் சுமார் 650–க்கும் மேற்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவிகள் சுற்றுப்புற கிராமப் பகுதிகளிலிருந்து வந்து கல்வி பயின்று வருகின்றார்கள். இவர்கள் கலசப்பாக்கத்திலேயே தங்கி, கல்வி பயில பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில், பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைத்துக் கொடுக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுசென்று, நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின்கீழ் 1,338 விடுதிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 1,112 பள்ளி விடுதிகள் மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன. மேலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 43 பள்ளி விடுதிகளும், 5 கல்லூரி

விடுதிகளும் மற்றும் ஒரு தொழில்நுட்ப மாணவர் விடுதியும் என மொத்தம் 49 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. 49 விடுதிகளும் அரசு சொந்தக் கட்டடங்களிலேயே செயல்பட்டு வருகின்றன.

கலசப்பாக்கம் தொகுதியில் 4 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், கலசப்பாக்கம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள 8 கிலோ மீட்டர் சுற்றளவில் 2 ஆதி திராவிடர் நலப் பள்ளி மாணவியர் விடுதிகள் தற்போது இயங்கி வருகின்றன. எனவே, கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைப்பதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆதமங்கலம் புதூர் கிராமத்தில் உள்ள அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், சுமார் 560 மாணவிகள் கல்வி பயின்று வருகின்றார்கள். அந்த மாணவியர்களின் நலனையும் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு ஒரு பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதியை அமைத்துத் தருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, தேவை மற்றும் நிதிநிலைமைக்கேற்ப, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*